# திருக்கோணமலை மாவட்டத்தினை ஆவணப்படுத்தல்
# ஆண்டறிக்கை 2023

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | திருக்கோணமலை மாவட்டத்தினை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2023/0001 |
| செயற்றிட்ட இடம் | திருக்கோணமலை |
| செயற்றிட்டக் காலம் | மார்ச், 2023 - செப்ரம்பர், 2023 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | |
| முக்கிய பங்குத்தாரர்கள் | எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | |

இலங்கையில் முக்கிய மாவட்டமாக கருதப்படும் அதே சமயம் பூகோள ரீதியிலும் முக்கிய பிரதேசமாக கருதப்படும் திருக்கோணமலை மாவட்டம் தமிழர்களின் வரலாற்றில் நீண்ட தொடர்ச்சியை கொண்ட ஒரு மாவட்டமாக காணப்படுவதுடன், வடக்குக் கிழக்கு இணைப்பின் தொடுப்பு புள்ளியாகவும், தமிழர் தரப்பை பொறுத்தவரை பிரதான முக்கியத்துவம் உடைய மாவட்டமாகவும் உள்ளது. இந்த மாவட்டத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் அண்ணளவாக எண்ணிக்கையில் சம நிலையை அண்மை காலங்களில் அடைந்துள்ளனர். எனினும் மாவட்டத்தின் பல பகுதிகளில் தமிழர் சார் வரலாற்றுச் சுவடுகளும், ஆவணப்படுத்தப்பட வேண்டிய பல விடயங்களும் காணப்படுகின்றது. முக்கியமாக தென்னவன் மரபு அடி தொடக்கம் வெருகல் வரை ஒவ்வொரு கிராமங்களும் வரலாற்றுக்கு முந்திய, வரலாற்றுக்குப் பிந்திய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை கொண்டுள்ளது. பாரம்பரிய பழக்கவழக்கங்கள், கலைகள், இலக்கியங்கள், பிரதேச முக்கியத்துவம் என பல விடயங்களை ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் நூலக நிறுவனம் திருக்கோணமலை மாவட்டத்தில் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை எழுத்து மூலம், அச்சு மூலம் உள்ள நூல்கள் தொடக்கம், பல்வேறுபட்ட பல்லூடக ஆவணங்களையும் ஆவணப்படுத்தி வருகின்றது.

இலக்குகளும் நோக்கங்களும்

- இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றின் உருவாக்கத்திலே திருகோணமலை மாவட்டமும், அங்கு வாழும் மக்களும் கொண்டிருக்கும் வகிபங்கினை வெளிக்கொண்டுவருதல்.
- திருகோணமலை மாவட்டமானது 11 பிரதேச செயலகர் பிரிவுகளாக வகுக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. அவ்வகையே திருகோணமலை மாவட்டம் தொடர்பான பல்வேறு தகவல் வளங்களை, தரவுகளைச் சேகரித்து, பாதுகாத்து, காட்சிப்படுத்தி அம்மாவட்டம் தொடர்பான பல்வேறு கல்விசார் மற்றும் சமூகம்சார் ஆய்வுகளுக்கு உதவுவதுடன் பண்பாட்டு பேணலுக்கும் உதவுதல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.
- திருகோணமலை பற்றிய ஆய்வுகளிலே ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்பினை வழங்குதலும், அவர்கள் தமக்கு வேண்டிய பிரதான ஆதாரங்களை இலகுவில் பெறக்கூடிய ஒரு அமைப்பினை இணைய வெளியில் உருவாக்குதல்

**2023** அடைவுகள்

| | பெறப்பட்ட ஆவணங்கள் | பக்கங்கள் | வாய்மொழி வரலாறுகள் | புகைப் படங்கள் | துண்டு ப்பிரசுரங்கள் | அழைப் பிதழ்கள் | ஆளுமை | நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மார்ச் | 19 | | | 6 | | 1 | | 1 |
| ஏப்ரல் | 117 | 2,316 | 2 | 82 | 7 | 5 | 3 | 5 |
| மே | 55 | 4,522 | 3 | 44 | 14 | 17 | 8 | 5 |
| யூன் | 151 | 2,956 | 2 | 27 | 73 | 11 | 9 | 5 |
| யூலை | 47 | 6,596 | 1 | 24 | 22 | 15 | 4 | 6 |
| ஆகஸ்ட் | 56 | 6,380 | 2 | 29 | 22 | 16 | 6 | 5 |
| செப்டம்பர் | 42 | 3,650 | 4 | 31 | 10 | 11 | 8 | 11 |
| ஒக்டோபர் | 47 | 6,948 | 2 | 54 | 15 | 26 | 5 | 6 |
| நொவெம்பர் | 40 | 1,234 | 0 | 18 | 10 | 10 | 5 | 7 |
| டிசம்பர் | 44 | 6,722 | 4 | 9 | 10 | 12 | 2 | 3 |
| மொத்தம் | **618** | **41,324** | **20** | **324** | **507** | **108** | **50** | **54** |

எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- பணியாளர்களைத் தெரிவு செய்வதும், அவர்களுக்கான இடம், உபகரணங்களை வழங்குவதும் சவாலாக அமையலாம். அதற்காக திருகோணமலை மாவட்டத்திலுள்ள சமூக நிறுவனங்களுடன் அல்லது ஆவணப்படுத்தல் சார்ந்து ஆர்வம் உள்ளவர்களை அணுகி பணியாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் காரியாலயம் ஒன்றினை அமைப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.
- தற்போதைய அரசியல் சூழ்நிலை கள ஆவணப்படுத்தல், தகவல் தொகுப்பு போன்றவற்றை சிக்கலாக்கலாக்கலாம். திருகோணமலை மாவட்டத்தை ஆவணப்படுத்துவது என்பது ஒரு பெரும் பணி. முதற்கட்டமாகவே இந்தச் செயற்றிட்டம் நடைபெறும் என்பதை அனைத்துப் பங்குதாரர்களுக்கும் புரிந்து கொள்ள வைப்பதில் சவால்கள் இருக்கலாம். பங்குதாரர்களுக்கு இப்பிராந்திய ஆவணப்படுத்தலின் தேவைகளையும், முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள வைத்தல். திருகோணமலை மாவட்டத்திலுள்ள முக்கிய ஆளுமைகளுக்கூடாக தொடர்புகளை ஏற்படுத்தி அதனூடாக ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை முன்னகர்த்த முடியும்.
- தற்போதைய சமூக நிலவரங்கள் சுகாதார முறைகள் (கொவிட் - 19) அமைவாக செயற்றிட்டத்தின் திட்டமிடல்களை மேற்கொள்ள முடியும்.

பின்னிணைப்பு

திருகோணமலை ஆவணகம்